உ
சிவமயம்



அமரர்

# சண்முகநாதன் சத்தியநாதன்

பிள்ளையார் ஸ்தாபன கணக்காளர் - மல்லாவி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

14.02.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# சண்முகநாதன் சத்தியநாதன்

பிள்ளையார் ஸ்தாபன கணக்காளர் - மல்லாவி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

14.02.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மைப்பெற்றெடுத்து
ஆசையுடன் அரவணைத்து
விரல் பிடித்து நடைபழக்கி
வித்தை பல கற்றுத்தந்தீர்களே...
துன்பம் எமை சூழாது
காத்து வந்த தந்தையே - உம்
அன்பினால் எமக்கு அறிவூட்டினீர்களே...
அப்பா நீங்கள்
இன்னும் பல காலம் எம்முடன் இருந்து
இன்பங்களை அனுபவிக்க வேண்டுமென
நினைத்திருந்தோம்...
சொல்லா நிலையில் எமைவிட்டு
எங்கப்பா சென்றீர்கள்- உங்கள்
பிரிவு எமை துடிதுடிக்க வைக்கிறதே...
உள்ளங்கள் வேதனையால் பரிதவிக்க
கண்ணிரண்டில் கண்ணீர் முத்துக்கள்
கனமாக திரண்டிருக்க
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
உங்கள் பாதங்களில்
பாசமலர் இதனைப் பணிவுடனே
சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



அன்னை மடியில்
31.03.1950

ஆண்டவன் அடியில்
15.01.2011

அமரர்

# சண்முகநாதன் சத்தியநாதன்

(கணக்காளர் பிள்ளையார் களஞ்சியம் மல்லாவி)

அவர்களின்

## திதிவெண்பா

மங்களமிகு விகிர்தி ஆண்டு தையில்
தங்கும் வளர்பிறை பூர்வபக்க ஏகாதசி திதியதனில்
நீண்ட புகழ் உடைய உத்தமனார் ச.சத்தியநாதன்
ஆண்டவனின் தாழ் சேர்ந்த நன்நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்



*திருச்சிற்றம்பலம்*

**விநாயகர் துதி**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

**தேவாரம்**

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றார் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின் றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அணையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர் காரமுதினை எதிரில்
போகநாயகனை புயல்வண்ணற்கருளி
பொன்நெடுஞ்சி விகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணீழி செழுங்கோயில்
யோக நாயகனையன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தா ரமரர் குழாத்தில்
அணியுடை யாதிரை நாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
இரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்கள்
திசையனைத் தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம் ஆம்என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடீ அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்தும வர்க்கத் தமரரும் அடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பச்சைத் தொடு ரட்சித் தருளுவது ஒருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைக்கும் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுவொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு கரிக்குத் ரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக் குகு குக்குக் குகுகுகு
குத்துப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்டபுற்றெழ நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமந்திரம்

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க.
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவியுடனும் இரு பிள்ளைகளுடனும்....



குடும்பத்தினருடன்....



மனைவியுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் திருமண நிகழ்வின் போது....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரப்பிள்ளையின் 31 நிகழ்வின் போது....



பேரப்பிள்ளையுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ச.சத்தியநாதன் (நாதன்) அவர்களின்
# வாழ்க்கைச்சரிதம்

இயற்கை அழகும் பசுமையான நிலவளமும் தன்னகத்தே கொண்ட யாழ் உரும்பிராயில் சண்முகநாதன் இராசம்மா தம்பதிகளின் ஐந்தாவது புதல்வனாக 1950ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம் திகதி பிறந்தார் தனது படிப்பை முடித்து 1967ல் கொழும்பு ராஜா கோப்பிறேசனில் (கம்பனியில் காசாளராக இருந்து 1969ல் கணக்காளராக பணியாற்றினார்.

1972 ல் யாழ்ப்பாணம் வேலணையைச் சேர்ந்த சேது பொன்னம்மா தம்பதிகளின் 8வது மகளான பாக்கியலட்சுமியை தனது விருப்பத்துடன் திருமணம் செய்து கொண்டார் பின் கொழும்பில் சந்தோசமாக வாழ்ந்த காலத்தில் 1974ல் மூத்த புதல்வனாக தவச்செல்வன் பிறந்தார் மகன் பிறந்த சந்தோசத்தில் குறைவற்ற செல்வமாய் வாழ்ந்தார் தொடர்ந்து ஐந்து புதல்வர்களைப் பெற்று ஆறு பிள்ளைகளுடன் சந்தோசமாய் வாழ்ந்தார்.

பிள்ளைகள் படிப்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்து அவர்களை உயர் படிப்பு வரை தானே தனி நின்று உழைத்து படிப்பித்தார்

1994ல் கிளிநொச்சி யாழ் களஞ்சியத்தில் கணக்காளராக பணிபுரிந்து பின் 1998ல் மல்லாவி பிள்ளையார் பிள்ளையார் களஞ்சிய கணக்காளராக பணியாற்றி மல்லாவி மக்களின் மனதில் அழியாத இடம் பிடித்தார்

இறுதிவரை உழைத்து வாழ்ந்த உத்தமன் தனது 60 ஆவது வயதில் தைப்பொங்கல் திருநாளன்று அன்பான மனைவியையும் பாசமிகு பிள்ளைகளையும் தனது ஸ்தாபன உரிமையாளர்களையும் தொழில் புரியும் நண்பர்கள். உற்றார். உறவினர்கள் எல்லோரையும் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டு இறைபதம் சேர்ந்து விட்டார் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

என் இதயக் கோயிலே அப்பா
என்னை விட்டு பிரிய மனம் வந்ததா ?
நான் கோபித்தாலும் உங்களுக்கு
கோபம் வராதே...
எத்தனை துன்பம் வந்தாலும்
தோள் சுமந்து தந்து என்னையும்
பிள்ளைகளையும் பார்த்தீர்களே
நான் கவலைப்பட்டால் தாங்கமாட்டீர்களே...
தேவி தேவி என்று எவ்வளவு அன்பாய் கூப்பிடுவீர்களே ... என்னையும்
பிள்ளைகளையும் விட்டு விட்டு பிரிய மனம் வந்ததோ...
உங்கள் பிரிவு கேட்டு நானும் பிள்ளைகளும் புழுவாய்த்
துடிதுடித்தோம்....
உங்கள் சிரிப்பும் சந்தோச வார்த்தைகளும்
எங்கள் காதில் ஒலிக்கின்றதே
உங்கள் வருத்தத்தையும் பாராது அயராது
உழைத்த தெய்வமே உங்களை எப்படித்தான்
பிரிந்து இருப்போம்
என்னையும் என் பிள்ளைகளையும்
நீங்கள் தான் வழி நடத்த வேண்டும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன் ஐயா.....

*ஒவ்வொரு மனிதனும் பிறந்தது வெற்றி பெறத்தான்*
*தோல்வியடைய அல்ல (ஹென்றி டேவிட்தோரர்)*

*தனி மனிதனின் தனி உரிமையான சிந்தனையால்*
*சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை*
*(ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்)*

*இரக்கம் காட்டுங்கள் ஆனால் ஏமாந்து போய்விடாதீர்கள்*
*(மாத் யூ கிரீன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அன்பு நிறைந்த அப்பாவே
எமையெல்லாம் துடிக்கவிட்டு - தனியாக
ஏனப்பா சென்றீர்கள் ...?
எம் கண்களில் ஒரு துளி நீர் நிறைந்தால்
கலங்கித் துடித்திடும் நீங்கள் - இன்று நாம்
கண்ணீரிர் கரைகின்றோம் காணவில்லையா அப்பா

எங்கள் எதிர்காலம் நினைத்து
எத்தனையோ கனவு கண்டீர்கள் அப்பா
எதையுமே கண்டு மகிழாமல்
எமைவிட்டுப் பிரிந்ததேன் அப்பா?

உணவுப் பொதிகளுடன் ஓடோடி வந்து
எமை உணவைத்து உண்ணும் உணவில்
ஒரு பிடி தா என்று ஆசையுடன் வேண்டி
உண்ணும் ஆருயிர் அப்பாவே - இனி
எம்முடன் பாசமழை பொழிய
யாரப்பா இருக்கிறார்கள்....?

ஞாயிற்றுக் கிழமை என்றால்
நம் வீட்டில் அளவில்லா ஆனந்தம்
அப்பாவின் வருகையினால் ......
எத்தனையோ ஞாயிறு எமைகடந்து
செல்கிறது .... ஏனப்பா நீங்கள் இன்னும்
எம்மிடம் வரவில்லை?
இருபது வயதை தாண்டி நாம் சென்றபோதும்
இனிப்புப் பண்டங்கள் வாங்கி - எம் வாயில்
ஊட்டி மகிழும் எம் இனிய அப்பாவே
உங்கள் அன்பை எங்கே நாம் தேடுவது?

கண்மணியாய் எமைக் காத்து வந்த அப்பாவே
உங்களைக் காணாது கண்கள்
கதறித்துடிக்கிறதே அப்பா - இனி
எப்போது உங்கள் அன்பு முகத்தை காண்பது
உங்கள் குரல் எப்போது கேட்பது.:.
எங்கள் அன்புக்குரிய அப்பாவே
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் துயர்

உன் பிரிவு எமையெல்லாம்
உருக்குலைய வைக்குதடா
மூத்தவர்கள் நாமிருக்க
முந்தி நீ எங்கு சென்றாய்?
சகோதரராய் கூடி மகிழ்ந்த காலமதை நினைத்து
ஏங்கியழ வைத்து விட்டு எங்கு தான் சென்றீரோ?

## மருமக்கள் துயர்

அன்பும் மதிப்பும் மிக்க மாமா
உங்கள் பிரிவுத் துயர் எம்மை
உருக்குலைய வைக்கின்றது
நகைச்சுவையாய் பேசி - எமை
நகைக்க வைக்கும் ஞாபகத்தை
நினைத்து மனம் வருந்துகின்றோம்
நின்மதியின்றி தவிக்கின்றோம்

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

ஆசைத் தாத்தாவே
கன்டோஸ் தந்து எமைவளர்த்த தாத்தாவே
எப்போ வருவீர்கள் தாத்தாவே
உங்களைக் காணாது அழுகின்றோம். தாத்தாவே.

**ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான்**
**என்பது முக்கியமல்ல!**
**ஆனால் எப்படி வாழ்ந்தான்**
**என்பதே மிக முக்கியமானது!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிவரை உடனிருந்த நண்பர்கள்

பல ஆண்டுகளாய் நீதியோடும்
நேர்மையோடும் பணி புரிந்து எல்லோருடனும்
அன்போடும் பண்போடும் பழகி எங்கள்
ஒவ்வொருவருடைய இதயத்திலும் இடம்பிடித்த
எங்கள் அன்புமிக்க கணக்காளர் நாதன் ஐயா ...
இறுதி வரை எம்முடன் இருந்து நம் ஸ்தான
வளர்ச்சிக்காய் அரும்பாடு பட்டுழைத்து நகைச்சுவை
பேச்சுடன் நமையெல்லாம் நகர்த்திச் சென்றவர்
யாரும் எதிர்பாராத வண்ணம் பொங்கல்
திருநாளன்று எமையெல்லாட் விட்டு
இறைபதம் அடைந்துவிட்டார் ....

"திரும்பிய திசைகள் எல்லாம் - உங்கள்
திருவதனம் தெரிகிறது - நமை
தேம்பியழ வைக்கின்றது உம் பாசத்துயர் ..
நீர் இருந்த இருக்கை - உம்
வருகைக்காய் காத்திருக்க
ஏங்கி நிற்கின்றோம் என் செய்வதென அறியாது"

நாதன் ஐயா உங்கள் ஆத்மா சாந்தி பெற
நாமும் இறைவனை வேண்டுகிறோம்.

பிள்ளையார் ஸ்தாபன
உரிமையாளர்களும், ஊழியர்களும்,
மல்லாவி.



மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே. நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உடல் பற்றிய தகவல்கள்

1) மனிதனின் சராசரி நாடித்துடிப்பு - நிமிடத்திற்கு 72 தடவைகள்

2) சராசரி வெப்பநிலை - 98.40 F, 36.80C

3) மிக நீண்ட எலும்பு - தொடை எலும்பு

4) மிகச்சிறிய எலும்பு - காதிலுள்ள எலும்பு (3mm)

5) எலும்புகள் அதிகம் உள்ள பகுதி - கைகள்

6) எலும்புகளின் மொத்த எண்ணிக்கை - 206

7) உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி - நகம், மயில்

8) முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலங்கள்

9) உயிரணுவில் உள்ள நிறமூர்த்தங்கள் - 23 கோடி

10) குருதி வகைகள் - A, B, AB, O
பொது வாங்கி - AB
பொது வழங்கி - O

11) நாக்கில் உள்ள சுவை அரும்புகள் - 10000

12) மிக வலிமையான தசைப்பகுதி - நாக்கு

13) மிகப்பெரிய தசை - இதயத்தசை

14) பிறப்பிற்குப் பின் வளர்ச்சியடையாத பகுதி - கரவிழிப்படலம்

15) முதலில் உறங்கும் உறுப்பு - கண்கள்

16) மனித உடலின் எலும்புகளின் எடை - 13%

17) கண்களால் பிரித்தறியக்கூடிய நிறங்களின் எண்ணிக்கை -17000

18) மிகத்தூய்மையான இரத்தமுள்ள பகுதி
- சிறுநீரகச் சிற்றறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) மூளையின் இயக்கும் நரம்புகள் - 12 கோடி

20) முள்ளந்தண்டில் உள்ள எலும்புகள் - 33

21) ஒரு நாளில் இதயத்துடிப்புகளின் எண்ணிக்கை - 103689

22) உடலில் வியர்க்காத பகுதி - உதடு

23) ஒரு நிமிடத்துக்கு பேசக்கூடிய சொற்கள் - 150

24) உடலின் மென்மையான சருமம் - கண் இமை

25) ஒரு நாளில் சராசரி உதிலும் தலைமுடிகள் - 40 -100 வரை

## செய்தி நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| ✦ இலங்கை | - | லங்காபுவத் |
| ✦ இந்தியா | - | **P.T.I.U.N.I** |
| ✦ ஈராக் | - | **I.N.A** |
| ✦ பிலிப்பைன்ஸ் | | **-P.N.A** |
| ✦ பாகிஸ்தான் | - | **A.P.P** |
| ✦ ஜப்பான் | - | சியோடே, கிகி |
| ✦ பிரான்ஸ் | - | **A.F.P** |
| ✦ இத்தாலி | - | அன்சா |
| ✦ ஜேர்மனி | - | **D.P.A.A.D.N** |
| ✦ யூகோஸ்லாவிய | - | டான்ஜிக் |
| ✦ ரஷ்சியா | - | டாஸ் |
| ✦ எகிப்து | - | மோனா |
| ✦ மொராக்கோ | - | **M.A.P** |
| ✦ ஸைரே | - | **A.Z.P** |
| ✦ கானா | - | **G.N.A** |
| ✦ கியூபா | - | பெரிலா |
| ✦ பிரேசில் | - | **A.N** |
| ✦ ஆர்ஜெண்ரீனா | - | டீலம் |
| ✦ மலேசியா | - | பெர்நமா |
| ✦ ஈரான் | - | இர்னா |
| ✦ அமெரிக்கா | - | **CNN**,ரொய்ட்டர் |
| ✦ பிரித்தானியா | - | **INT** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவான விடயங்கள்

1) பிறப்பு விகிதமே இல்லாத நாடு - வாடிகன் சிட்டி

2) படகு வடிவில் அமைந்துள் நாடு - இத்தாலி

3) உலகின் மிகப்பெரிய பங்குச்சந்தை - நியூயோர்க்

4) கண்ணாடித் தொழிலுக்குப் பெயர் பெற்ற நாடு -பெல்ஜியம்

5) உலகில் மின்தடை இல்லாத நாடு - குவைத்

6) மூன்று அடிப்படை நிறங்கள் - சிவப்பு, மஞ்சஞ், நீலம்

7) கடல் மட்டத்திற்குக் கீழே உள்ள நாடு - டென்மார்க்

8) உலகின் மிகப்பழமையான பாராளுமன்றம் உள்ள நாடு - ஐஸ்லாந்து

9) உலகின் மிகவும் மதிப்பு மின்ன ஓவியம் - மோனாலீசா (மரத்தில் வரையப்பட்டுள்ளது.

10) வருடம்தோறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் நாடு - சுவிற்சலாந்து

11) சத்தில்லாத உணவு - நிர்

12) பூச்சியத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு - இந்தியா

13) பசுமைப்புரட்சி ஏற்பட்ட வருடம் - 1960 ஆம் ஆண்டு

14) அமெரிக்கப் புரட்சியின் பிறப்பிடம் - பொஸ்டன்

15) உலகில் மிகப் பிரபல்யமான பொழுதுபோக்கு - தபால் தலை சேகரித்தல்

16) கடல்நீர் நீலமாக இருக்கும் அளவு - 10 அடிகள்

17) ஆறுகள் இல்லாத நாடு - அரேபியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) திருமணத்தின்போது தேசியகீதம் பாடப்படும் நாடு
- நைஜீரியா

19) பெண்களுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி அறிக்கும் நாடு
- இஸ்ரேல்

20) கூடிய வானொலி நிலையங்களைக் கொண்ட நாடு
- அமெரிக்கா

21) நாட்டின் பெயரைக் குறிப்பிடாது முத்திரை வெளியிடும் நாடு
- ஐக்கிய ராச்சியம்

22) உலகின் முதல் பெண் ஜனாதிபதி
- மரியா எஸ்தோலோ பெரோன் (ஆர்ஜென்ரீனா - 1974)

23) பழங்களின் அரசன் - மாம்பழம்

24) காகமே இல்லாத நாடு - நியூசிலாந்து

25) ஈபிள் கோபுரத்திலுள்ள படிக்கற்களின் எண்ணிக்கை
- 729

26) பாலைவனம் இல்லாத கண்டம் - ஐரோப்பா

27) உலகில் மிக அதிகமான மின்னலால் பாதிக்கப்படும் நாடு
- பனாமா

28) இறப்பு விகிதம் குறைவான நாடு - குவைத்

29) முதன்முதல் கண் வங்கியை ஆரம்பித்த நாடு - இலங்கை

30) உலகில் முதலில் தோன்றிய இலக்கியம் - இராமாயணம்

31) படகுப் போக்குவரத்து மட்டும் நடைபெறும் நாடு
- லாவோஸ்

32) துப்பாக்கியைத் தன் கொடியில் சின்னமாக வைத்துள்ள நாடு
- மொஸாம்பிக்

33) முதன்முதலில் நாணயத்தை அறிமுகம் செய்தவர்கள்
- கிரேக்கர்

34) பரபஞ்சம் தோன்றியது- 13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரல் வகை

1) அணில் - கீச்சிடும்

2) சிங்கம் - கர்ச்சிக்கும்

3) ஆடு - கத்தும்

4) ஆந்தை - அலறும்

5) எருது - முக்காரம் போடும்

6) எலி - கத்தும்

7) கரடி - கத்தும்

8) காகம் - கரையும்

9) குதிரை - கனைக்கும்

10) நாய் - குரைக்கும்

11) குயில் - கூவும்

12) குருவி - கீச்சிடும்

13) தவளை - கத்தும்

14) நரி - ஊளையிடும்

15) பசு - கதறும், கத்தும்

16) பன்றி - உறுமும்

17) பல்லி - சொல்லும்

18) பாம்பு - சீறும்

19) பூனை - சீறும்

20) யானை - பிளிறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுச் சொற்கள் (இளமைப் பெயர்கள்)

1) அணில் - குஞ்சு, பிள்ளை

2) நாய் - குட்டி, குருளை, பறழ்

3) ஆடு - குட்டி

4) எருமை - கன்று, பிள்ளை

5) கரடி - குட்டி

6) சிங்கம் - குட்டி, குருளை

7) குதிரை - குட்டி

8) புலி - குட்டி, குருளை

9) மான் - கன்று, குட்டி

10) யானை - கன்று போதகம்

11) பன்றி - குட்டி, பறழ்

12) பூனை - குட்டி

13) மனிதன் - குழவி, குழந்தை, பிள்ளை

14) காகம் - குஞ்சு

15) கிளி - குஞ்சு, பிள்ளை

16) தவளை - குஞ்சு, பேத்தை

17) தென்னை - கன்று, பிள்ளை

18) நெல் - நாற்று

19) பனை - வடலி

20) வாழை - கன்று, குட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்களும் ஆண்டுகளும்

| | |
|---|---|
| 1 வது | - கடதாசி விழா |
| 2 வது | - பருத்தி விழா |
| 3 வது | - தோல் ஆண்டு |
| 5 வது | - இரும்பு விழா |
| 6 வது | - மர ஆண்டு |
| 10 வது | - தகர விழா |
| 12 வது | - பட்டு ஆண்டு |
| 14 வது | - தந்த ஆண்டு |
| 15 வது | - படிக ஆண்டு |
| 20 வது | - சீனக்களிமண் விழா |
| 25 வது | - வெள்ளி விழா |
| 30 வது | - முத்து விழா |
| 35 வது | - பவள விழா |
| 50 வது | - பொன்விழா |
| 55 வது | - மரகத ஆண்டு |
| 60 வது | - வைர விழா, மணிவிழா |
| 75 வது | - பவள விழா |
| 80 வது | - அமுதவிழா |
| 100 வது | - நூற்றாண்டு விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலங்கள்

* குறிஞ்சி - மலையும் மலைசாரந்த இடமும்
* மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்
* முல்லை - காடும் காடுசார்ந்த இடமும்
* பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்
* நெய்தல் - கடலும் கடல்சார்ந்த இடமும்

## உயிரின வாழ்க்கைக்காலம்

★ பருந்து - *100* ஆண்டுகள்

★ கழுகு - *100* ஆண்டுகள்

★ கழுதை - *35* ஆண்டுகள்

★ திமிங்கிலம் - *35* ஆண்டுகள்

★ குதிரை - *25* ஆண்டுகள்

★ புலி - *18* ஆண்டுகள்

★ நாய் - *15-20* ஆண்டுகள்

★ சிங்கம் - *16* ஆண்டுகள்

★ நீர்வாத்து - *14* ஆண்டுகள்

★ தவளை - *10* ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| ★ ஜனவரி 04 | - உலக பிறெய்லி தினம் |
| ★ ஜனவரி 12 | - உலக இளைஞர் தினம் |
| ★ பெப்ரவரி 11 | - உலக நோயாளர் தினம் |
| ★ பெப்ரவரி 14 | - உலக காதலர் தினம் |
| ★ பெப்ரவரி 20 | - உலக சமூகநீதி தினம் |
| ★ பெப்ரவரி 28 | - உலக நோயாளர் தினம் |
| ★ மார்ச் 8 | - உலக மகளிர் தினம் |
| ★ மார்ச் 11 | - உலக பொதுநலவாய தினம் |
| ★ மார்ச் 13 | - உலக சிக்கன தினம் |
| ★ மார்ச் 15 | - உலக ஊனமுற்றோர் தினம் |
| ★ மார்ச் 22 | - சர்வதேச குடிநீர் தினம் |
| ★ மார்ச் 27 | - சர்வதேச நாடக தினம் |
| ★ ஏப்ரல் 01 | - சர்வதேச முட்டாள் தினம் |
| ★ ஏப்ரல் 07 | - சர்வதேச சுகாதார தினம் |
| ★ ஏப்ரல் 23 | - சர்வதேச புத்தக தினம் |
| ★ மே 01 | - சர்வதேச தொழிலாளர் தினம் |
| ★ மே 14 | - சர்வதேச அன்னையர் தினம் |
| ★ மே 17 | - உலக தகவல் தொடர்பு தினம் |
| ★ யூன் 20 | - உலக அகதிகள் தினம் |
| ★ யூன் 23 | - சர்வதேச ஒலிம்பிக் தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ யூன்26 - சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம்

☆ யூன் 27 - உலக நீரிழிவாளர் தினம்

☆ யூலை 11 - உலக சனத்தொகை தினம்

☆ யூலை 28 - சர்வதேச அகதிகள் தினம்

☆ ஆகஸ்ட் 29 - சர்வதேச விளையாட்டு தினம்

☆ செப்ரெம்பர் 08 - சர்வதேச எழுத்தறிவு தினம்

☆ செப்ரெம்பர் 10 - சர்வதேச தற்கொலை தினம்

☆ செப்ரெம்பர் 21 - சர்வதேச சமாதான தினம்

☆ ஒக்டோபர் 01 - உலக சிறுவர் தினம்

☆ ஒக்டோபர் 02 - உலக குடியிருப்பு தினம்

☆ ஒக்டோபர் 03 - சர்வதேச மதுஒழிப்பு தினம்

☆ ஒக்டோபர் 05 - உலக சிறுமிகள் தினம்

☆ ஒக்டோபர் 06 - சர்வதேச ஆசிரியர் தினம்

☆ ஒக்டோபர் 15 - சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

☆ ஒக்டோபர் 16 - சர்வதேச உணவு தினம்

☆ ஒக்டோபர் 30 - சர்வதேச சேமிப்பு தினம்

☆ நவம்பர் 20 - உலக சிறுவர் கடற்தொழில் தினம்

☆ நவம்பர் 21 - சர்வதேச கடற்தொழல் தினம்

☆ டிசம்பர் 01 - சர்வதேச எயிட்ஸ் தினம்

☆ டிசம்பர் 03 - உலக ஊனமுற்றோர் தினம்

☆ டிசம்ர் 14 - சர்வதேச குழந்தைகள் தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினைப்பெயர்கள்

**இலைக்குரிய மரபுப் பெயர்**

- இலை - மா, பலா, வாழை
- ஓலை - தென்னை, பனை, கமுகு, தாழை
- தாள் - நெல், புல்

**பிஞ்சுக்குரிய மரபுப் பெயர்**

- கச்சல் - வாழையின் இளம் பிஞ்சு
- குரும்பை - தென்னையின் இளங்காய்
- நுங்கு - பனையின் இளங்காய்
- வடு - மாவின் இளம் பிஞ்சு
- மூசு - பலாவின் பிஞ்சு

**குலைக்குரிய மரபுப் பெயர்**

- குலை - வாழை, முந்திரி,
- ஈஞ்சு - என்பனவற்றின் காய்த்தொகுதி.
- கொத்து - மா, புளி என்பனவற்றின் காய்த்தொகுதி
- கதிர் - நெல், சோயம் என்பனவற்றின் காய்த்தொகுதி
- தாறு - வாழைக்குலை.

## வித்துக்குரிய மரபுப்பெயர்

- கொட்டை - மா, பலா, புளி
- மணி - நெல், சோளம்
- முத்து - ஆமணக்கு
- விதை - கத்தரி, மிளகாய்

## உள்ளீட்டுக்குரிய மரபுப்பெயர்

- அரிசி- நெல், கம்பு, வரகு, திணை
- சதை - மா, வாழை
- சுளை - பலா, தோடை
- பருப்பு - கத்தரி, மிளகாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறமரபுப் பெயர்கள்

★ ஆட்டுமலம் - பிழுக்கை

★ கழுதைமலம் - விட்டை

★ பறவை மலம் - எச்சம்

★ மாடு, எருமை மலம் - சாணம்

★ யானை, குதிரை, ஒட்டகம் - இலத்தி, இலண்டம்

★ ஆடு மேய்ப்பவன் - இடையன்

★ ஆ(பசு) மேய்ப்பவன் - ஆயன் (இடையன்)

★ குதிரை, யானை. தேர் செலுத்துபவன் - வலவன்

★ வானவூர்தி செலுத்துபவன் - வலவன்

## மொழிகள்

✦ தமிழ் - பக்தி மொழி
✦ ஆங்கிலம் - வணிக மொழி
✦ பிரெஞ்ச் - காதல் மொழி
✦ இத்தாலி - இசை மொழி
✦ கிரேக்கம் - சட்டமொழி
✦ உருது - கவிதை மொழி

## எண்சோதிட இரத்தினம்

| | |
|---|---|
| 1. மாணிக்கம் | Ruby |
| 2. முத்து | Pearl |
| 3. புஸ்பராகம் | Golden sapphire |
| 4. கோமேதகம் | Cinnamim |
| 5. வைரம் | Diamond |
| 6. மரகதம் | Emarald |
| 7. வைடூரியம் | Cats Eye |
| 8. நீலம் | Blue Sapphire |
| 9. பவளம் | Coral |

1- A I J Q Y
2- B K R
3- C G L S
4- D M T
5- E H N X
6- U V W
7- O Z
8- F P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள்

- ☞ A1 கொழும்பு - கண்டி
- ☞ A2 கொழும்பு - வெள்ளவாய
- ☞ A3 பேலியகொட - புத்தளம்
- ☞ A4 கொழும்பு - புத்தளம்
- ☞ A5 பேராதனை - செங்கலடி
- ☞ A6 அம்பேபுஸ்ஸ - திருகோணமலை
- ☞ A7 அவிஸ்ஸாவெல - இரத்தினபுரி
- ☞ A8 பாணந்துறை - இரத்தினபுரி
- ☞ A9 கண்டி - யாழ்ப்பாணம்
- ☞ A10 கண்டி - புத்தளம்
- ☞ A11 மரதன் - கடவெல திருகண்டிமடு
- ☞ A12 புத்தளம் - திருகோணமலை
- ☞ A13 அநுராதபுரம் - கல்கமுவ
- ☞ A14 மதவாச்சி - தலைமன்னார்
- ☞ A15 மட்டக்களப்பு - திருகோணமலை
- ☞ A16 பேரகல - ஹாலிஎல
- ☞ A17 காலி - மாதம்பே
- ☞ A18 பெல்மதுளை - நோனாகம
- ☞ A19 பொல்காவெல - கேகாலை
- ☞ A20 அனுராதபுரம் - ரம்பேவ
- ☞ A21 கேகாலை - கரவனல்ல
- ☞ A22 பசறை - மொனராகல
- ☞ A23 வெள்ளவாய - எல்ல
- ☞ A24 மாத்தளை - அக்குரஸ
- ☞ A25 சியம்பலதுவ - அம்பாறை
- ☞ A26 கண்டி - படியத்தலாவ
- ☞ A27 அம்பாறை - மகாஓயா
- ☞ A28 அனுராதபுரம் - படேனியா
- ☞ A29 வவுனியா - ஹொரவப்பொத்தான
- ☞ A30 வவுனியா - பறையனாலங்குளம்
- ☞ A31 காரைதீவு - அம்பாறை
- ☞ A32 நாவற்குழி - மன்னார்
- ☞ A33 ஜாஎல - யக்கல
- ☞ A34 மாங்குளம் - முல்லைத்தீவு
- ☞ A35 பரந்தன் - முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஆட்சியாளர்கள்

## ⇨ கவர்னர்கள்

- சேர் ஹென்றி மொன்க் மேசன் மூர்
- வண. விஸ்கன்ட் சோல்பரி
- சேர் ஒலிவர் குணதிலக
- வில்லியம் கோபல்லாவ

## ⇨ பிரதமர்கள்

- D.S.சேனநாயக்க
- டட்லி சேனநாயக்க
- சேர்.ஜோன் கொத்தலாவல
- S.W.R.D. பண்டாரநாயக்க
- W.தஹநாயக்க
- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
- J.R.ஜெயவர்த்தன
- சு.பிரேமதாசா
- D.B.விஜயதுங்க
- ரணில் விக்கிமரசிங்க
- சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
- மகிந்த ராஜபக்ஷ
- ரட்ணசிறி விக்கிரமநாயக்கா
- டி.எம்.ஜயரட்ண

## ⇨ ஜனாதிபதிகள்

- வில்லியம் கோபல்லாவ (நிறைவேற்றதிகாரமற்ற ஜனாதிபதி)
- து.சு.ஜெயவர்த்தனா
- சு.பிரேமதாசா
- D.B.விஜயதுங்க
- சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
- மகிந்த ராஜபக்ஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

**கல்வி அறிவு வீதம்**

- மொத்தம் - 925
- ஆண் - 94.5
- பெண் - 90.6

**மொத்தப் பாடசாலைகளின் எண்ணிக்கை - 10429**

- அரச பாடசாலைகள் - 9678
- தேசிய பாடசாலைகள் - 328
- ஏனைய பாடசாலைகள் - 751
- தனியார் பாடசாலைகள் - 93
- பிரிவேனாக்கள் - 658

- மாணவர்கள் (000) - 4098
- ஆசிரியர்கள் (000) - 219
- கல்விக்கான மொத்த செலவீனம் (ரூ.பில்லியன்)- 925

**பல்கலைக்கழக கல்வி**

- பல்கலைக்கழகங்கள் - 15
- மாணவர்கள் - 66996
- அடிப்படை பட்டப்படிப்புக்களுக்குப்
- புதிதாக அனுமதி - 17196

சார்க் நாடுகளிடையே எழுத்தறிவு வீதம் கூடிய நாடு மாலைதீவு (96%)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குறியீடுகள்

☆ வெண்புறா, ஒலிவ்மரத்தின் இலை- சமாதானம்

☆ சிவப்புச் சக்கரம் - வளர்ச்சி

☆ சிவப்பு முக்கோணம் - குடும்பக் கட்டுப்பாடு

☆ சிவப்பு விளக்கு - மருத்துவமனை, ஆபத்துநிறுத்து.

☆ சிவப்புக்கொடி - உலகத் தொழிலாளர் அமைப்பு

☆ கறுப்பு கொடி - எதிர்ப்பு, சோகம், மரணம்

☆ மஞ்சள் கொடி - தொற்றுநோய்

☆ செஞ்சிலுவை - மருத்துவ உதவி

☆ செம்பிறை - அரசு நாடுகளின் செம்பிறைச் சங்கம்

☆ கையில் சட்டையில் கறுப்புத்துணி - துக்கம்

☆ அரைக்கம்பத்தில் தேசியக்கொடி - இரங்கல்

☆ தலைகீழான கொடி - துன்பம்

☆ வெள்ளைக்கொடி - சமாதானம், பௌத்தர்களின் துக்கம்

☆ பச்சை விளக்கு - அனுமதி

☆ தாமரை - பண்பாடு, நாகரிகம்

☆ தீப்பந்தம் - ஒலிம்பிக்

☆ கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் - நீதிபதி

☆ சுட்டுவிரலும் நடுவிரலும் சேர்த்து V அடையாளம் - வெற்றி

☆ மேல் நோக்கி செங்குத்தான கொடி - வெற்றி ஆரம்பம்

☆ ஊடைந்த கைவிலங்குடன் இருகைகள் - விடுதலை

☆ பெருவிரல் சிறுவிரல் இரண்டையும் மடித்து மத்தியில் உள்ள முன்விரல்களையும் காட்டல் - சாரணர் இயக்க சத்தியப்பிரமாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகைநிலைப் பெயர்கள்

| | |
|---|---|
| * இருகுரவர் | - தாய், தந்தை |
| * இரு மரபு | - தாய்மரபு, தந்தை மரபு |
| * இரு சுடர் | - சூரியன், சந்திரன் |
| * இரு பற்று | - அகப்பற்று, புறப்பற்று |
| * இரு திணை | - உயர்திணை, அறிணை |
| * இருமை | - இம்மை, மறுமை |
| * இரு நிதி | - சங்க நிதி, பதுமநிதி |
| * இரு பொருள் | - கல்வி, செல்வம் |
| * முக்கனி | - மா, பலா, வாழை |
| * முத்தமிழ் | - இயல் , இசை, நாடகம் |
| * முத்தொழில் | - படைத்தல், காத்தல், அழித்தல் |
| * முப்பொறி | - மனம், வாக்கு, காயம் |
| * மும்மலங்கள் | - ஆணவம், கன்மம், மாயை |
| * மும்மூர்த்திகள் | - சிவன், பிரம்மா, விஸ்னு |
| * முக்குற்றங்கள் | - காமம், வெகுனி, மயக்கம |
| * முக்கடுகம் | - சுக்கு, மிளகு, திப்பிலி |
| * மூவுலகம் | - பூலோகம், பாதாளலோகம், வானுலகம் |
| * முச்சுடர் | - சூரியன், சந்திரன், அக்கினி |
| * நால்வகைப்பா | - ஆசிரியப்பா,வஞ்சிப்பா,கலிப்பா, வெண்பா |
| * நால்வகைப்பூ | - கோட்டுப்பூ, கொடிப்பூ, நீலப்பூ, நீர்ப்பூ |

# காலங்கள்

* சங்க காலம் - கி.பி 1-3 ஆம் நூற்றாண்டு வரை
* சங்கம் மருவிய காலம் - கி.பி 3-6 ஆம் நூற்றாண்டு வரை
* பல்லவர் காலம் - கி.பி 6-9 ஆம் நூற்றாண்டு வரை
* சோழர் காலம் - கி.பி9-14 ஆம் நூற்றாண்டு வரை
* விஜய நகர நாயக்கர் காலம் -கி.பி 14-16ஆம் நூற்றாண்டு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

31 - 03 - 1950



மறைவு

15 - 01 - 2011

ஸ்கந்தபுரம் ஸ்கந்தாவிளையாட்டுக்கழக பொருளாளர் தவசீலனின்

தந்தை

அமரர்

## சண்முகநாதன் சத்தியநாதன்

ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

உங்கள் மரணம்
உயிரின் நாடிகளையே
உலுப்பி விட்டிருக்கிறது...!
நிஜம் என்று எண்ண
நெஞ்சம் மறுக்கிறது
காற்றிலே வந்த செய்தி
கனவாக வேண்டும் – என்று
கருணை மனு கேட்கிறது இதயம்...!
உயிரில் கலந்திருந்த
உங்கள் உறவுகளை
ஏங்க வைத்து சென்றீர்களே...!



ஸ்கந்தபுரம் ஸ்கந்தா
விளையாட்டுக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
31 - 03 - 1950



மறைவு
15 - 01 - 2011

அமரர்

## சண்முகநாதன் சத்தியநாதன்

ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

(தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் முல்லை மர்வட்ட பரிசோதகர் தவசீலன் அவர்களின் தந்தை.)

காலன் அவன் செயலால் – எம்
அன்பின் அரவணைப்பிலிருந்து
விலகிச் சென்ற தந்தையே
எம்மிடம் சொல்லாமல்
விண்ணகம் சென்றதேனோ
ஆறுதல் அடைய முடியவில்லை – எம்
விழிகளால் வேண்டுகின்றோம் – உம்
ஆத்மா சாந்திக்காக – பிதாவே..!
நிழலான வாழ்வில்
நொடியில் மறைந்த – உம்
நிழலிற்காக ஏங்கிடும்...!

பணியாளர்கள்,
தேசிய பயிலுனர் கைத்தொழில்
பயிற்சி அதிகாரசபை (NAITA)
கிளிநொச்சி மாவட்டம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்அஞ்சலி

அன்னை மடியில் 31 * 03 * 1950

ஆண்டவன் அடியில் 15 * 01 * 2011



## சண்முகநாதன் சத்தியநாதன்

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்து இன்று.....
காற்றோடு கலந்துவிட்ட எம்மினிய நண்பனே
கூற்றுவன் கொடியவன்
உன்னை ஏன் அழைத்தான்-நீ
மடிந்தாய் என்பதை நம்பவே முடியவில்லை
சிரித்த உன் முகம்
அன்போடும் பண்போடும் பேசும் உன் உதடுகள்
மறக்குமா இனி எப்போதும்
பண்பாக பறைசாற்றும் உன் அறிவுரைகள்
மறைந்தும் மறையாத சூரியனாய்
எப்போதும் எம் மனதில் வாழ்வாய்.

இப்பிரிவால் துயரித்திருக்கும் மனைவி,பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

☆ நிலா உணவகம்
☆ KvM பிரதர்ஸ்
☆ தாரங்கி நகைமாடம்

☆ பொய்கை அழககம்
☆ துர்க்கை அம்மன் புத்தகசாலை
☆ ஆஞ்சநேயர் பல்பொருள் வாணிபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 31 . 03 . 1950

விண்ணில் 15 . 01 . 2011



அமரர்

**சண்முகநாதன்-சத்தியநாதன்(நாதன் ஐயா)**

பாசத்தின் உறைவிடமே
பண்பான எம் உறவே
நேசக் குலவிளக்கே
நோகுததையா எம் இதயம் - உங்கள்
மறைவுச் செய்தி கேட்டதிலிருந்து.
உங்கள் கனவுகள் ஒவ்வொன்றும்
நிஜமாய் இருக்க வேண்டும் என்றிருக்க - நீங்கள்
நிழலாக்கி விட்டு சென்றதேனோ.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தார், உற்றார்,உறவினர் நண்பர்கள்
அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Naitta Teachers**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## சண்முகநாதன் சத்தியநாதன்(நாதன் ஐயா)

அன்பாய் எம்மோடு!
பண்பாய் பேசிடுவாய்!
துன்ப துயரம் தாங்கி!
பன்புடனே அன்புடனே அணைத்திடுவாய்
ஊர் போற்றும் உத்தமனாய் வாழ்ந்தாய்
இன்று ஊர் விட்டு பார் விட்டு
பறந்தெங்கு சென்றாய்!
நீர் சொரிந்து நிற்கின்றோம்!
நின் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.



ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்
31.03.1950

மறைவு
15.1.2011

ஈர விழிகளுடன்...

உரிமையாளர்களும்
ஊழியர்களும்
பிள்ளையார் ஸ்டோர்ஸ் மல்லாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சண்முகநாதன் சத்தியநாதன் (நாதன்)*
**(மல்லாவி பிள்ளையார் களஞ்சிய கணக்காளர்)**



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இல. 143ஏ, ஸ்கந்தபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சத்தியநாதன் (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியலட்சுமியின் (தேவி) அன்புக் கணவரும் தவச்செல்வன், காலஞ்சென்ற தமிழ்க்குமரன் (மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் மாணவன்), சத்தியப்பிரியா (குமரன் புத்தக சாலை, ஸ்கந்தபுரம்), தவசீலன் (பரிசோதகர், தேசிய தொழில் நுட்பக் கல்லூரி, முல்லை மாவட்டம்), காலஞ்சென்ற சத்தியவேணி, சர்மிளா (ஆசிரியை, அக்கராயன் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாமதி, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகிர்தா, டினேசா, கிசாந்தன், யசிந்தா, தமிழ்நிலா ஆகியோரின் அன்புப் பேரனும் பத்மநாதன் (உரும்பிராய்), அருமைநாதன் (ஆசிரியர், உரும்பிராய்), நவமணி (கோண்டாவில்), சிறிதாம்பாள் (ஆசிரியர், உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை இல. 143ஏ, ஸ்கந்தபுரம் இல்லத்தில் நடைபெற்று ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**இல. 143ஏ, ஸ்கந்தபுரம்.** *(109398)* குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



மல்லாவி, பிள்ளையார் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் பல வருடங்கள் கணக்காளராகக் கடமையாற்றிய

**சண்முகநாதன் சத்தியநாதன்**
**(நாதன் ஐயா)**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்.**
**மல்லாவி.**


**உரிமையாளரும், ஊழியர்களும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்தோன்றல்

**சண்முகநாதன் – இராசம்மா**




♦ அமரர்களுக்குரியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

அப்பாவின் அதிர்ச்சியான செய்தி கேட்டு
அனலில் இட்ட மெழுகாய்
உருகிநாம் நின்றவேளை
பக்கத்தில் இருந்தும் பல இடங்களில் இருந்தும்
ஓடோடி வந்து - நம் துயரில் பங்கு கொண்டு
பணி புரிந்த யாவருக்கும்...
எம்துயர் கண்டு ஏக்கமுடன்
முன்னின்று உதவி செய்த
பிள்ளையார் ஸ்தாபன உரிமையாளர்களுக்கும்
ஊழியர்களுக்கும் ...
துயரச்செய்தி கேட்டு துயரப்படும் எமக்கு
ஆறுதலாய் இருந்து
உறவான நண்பர்களுக்கும்...
வெளிநாட்டில் இருந்து தொலைபேசி மூலம்
துயர்பகின்ற உறவினர்களுக்கும் ...
இன்னும் பல உதவி புரிந்தவர்களுக்கும்....
அந்தியேட்டி கிரியை செய்த
பிராமண உத்தமர்களுக்கும்...
உடனடி தேவை கருதி
சேவை செய்த யாவருக்கும் எம்
உளமார்ந்த நன்றிகள்...



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஸ்ரீ பிறின்டேர்ஸ், நீராவியடி, யாழ்ப்பாணம். 021 3001940